# மார்ச் – 28 – தவக்கால 03 ம் வியாழன்

## "என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார்" லூக் 11:23

## முதல் வாசகம் : எரேமியா 7 : 23 – 28

ஆண்டவர் கூறியதாவது: நான் அவர்களுக்குக் கொடுத்த கட்டளை இதுவே. என் குரலுக்குச் செவி கொடுங்கள் அப்போது நான் உங்களுக்குக் கடவுளாய் இருப்பேன். நீங்கள் எனக்கு மக்களாய் இருப்பீர்கள். நான் கட்டளையிட்ட நெறிகள் அனைத்தையும் கடைப்பிடியுங்கள். அது உங்களுக்கு நலம் பயக்கும். அவர்களோ செவி சாய்க்கவும் இல்லை கவனிக்கவும் இல்லை பிடிவாத குணமுடைய அவர்களின் தீய உள்ளத்தின் திட்டப்படி நடந்தார்கள் முன்னோக்கிச் செல்வதற்குப் பதில் பின்னோக்கிச் சென்றார்கள். உங்கள் மூதாதையர் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய நாளிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து என் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களை உங்களிடம் அனுப்பியுள்ளேன். அவர்களோ எனக்குச் செவிசாய்க்க வில்லை கவனிக்கவில்லை. முரட்டுப் பிடிவாதம் கொண்டு தங்கள் மூதாதையரைவிட அதிகத் தீச்செயல் செய்தனர். நீ அவர்களிடம் இச்சொற்களை எல்லாம் கூறுவாய் அவர்களோ உனக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். நீ அவர்களை அழைப்பாய் அவர்களோ உனக்குப் பதில் தரமாட்டார்கள். தங்களின் கடவுளாகிய ஆண்டவரின் குரலைக் கேளாத, அவர் தண்டித்தும் திருந்தாத இனம் இதுவே, என அவர்களிடம் சொல். உண்மை அழிந்து போயிற்று. அது அவர்கள் வாயிலிருந்து அகன்று போயிற்று.

**பதில்பாடல் :** உங்கள் இதயங்களைக் கடிணப்படுத்தாதீர் ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர்.

## நற்செய்தி : லூக்கா 11 : 14 - 23

அக்காலத்தில், ஒருநாள் இயேசு பேச்சிழந்த ஒருவரிடமிருந்து பேயை ஓட்டினார். பேய் வெளியேறவே, பேச்சற்ற அவர் பேசினார். கூட்டத்தினர் வியந்து நின்றனர். அவர்களுள் சிலர், "பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" என்றனர். வேறுசிலர் அவரைச் சோதிக்கும் நோக்குடன், வானத்திலிருந்து ஏதேனும் ஓர் அடையாளம் காட்டுமாறு அவரிடம் கேட்டனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்களிடம் கூறியது "தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப்போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் விழுந்துவிடும். சாத்தானும் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போனால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? பெயல்செபூலைக் கொண்டு நான் பேய்களை ஓட்டுகிறேன் என்கிறீர்களே. நான் பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக் கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? ஆகவே அவர்களே உங்கள் கூற்று தவறு என்பதற்குச் சாட்சிகள். நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா! வலியவர் ஆயதம் தாங்கித் தம் அரண்மனையைக் காக்கிறபோது அவருடைய உடைமைகள் பாதுகாப்பாக இருக்கும். அவரைவிட மிகுந்த வலிமையுடையவர் ஒருவர் வந்து அவரை வென்றால் அவர் நம்பியிருந்த எல்லாப் படைக் கலங்களையும் பறித்துக் கொண்டு, கொள்ளைப் பொருளையும் பங்கிடுவார். "என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார் என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறச் செய்கிறார்.

**தியானம் :** ஒற்றுமையே பலம். இணைந்து இருக்கின்ற போது பிரிவினைக்கு இடம் இல்லை. ஆனால் பிரிவு வந்துவிட்டால் அது வளர்ந்து கொண்டே போகும். இதனை நமது சாதரண வாழ்வில் நாம் கண்டோம் கேட்டோம் அனுபவித்தோம். குடும்பத்தில் பிளவு வந்துவிட்டால் அதனை சீர்செய்வது கடினம். சிலர் அனுதாபம் காட்டுவதுபோல் பேசி பிளவினை இன்னும் அதிகரிக்க செய்வார்கள். வேறு சிலர் இரு சாராரிடமும் நட்பு பாராட்டி இருபுறமும் உள்ள கதைகளை சொல்லி இன்னும் பிரிவை வளர்ப்பார்கள். இவர்கள் மட்டில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இதனை இன்றைய நற்செய்தி மூலம் யேசு நமக்கு புரிய வைக்கின்றார். குற்றம் காண்பவர்கள் எங்கும் இருக்கின்றார்கள். அவர்கள் யேசுவில்கூட குற்றம் காண முற்படுகின்றார்கள். ஆனால் யேசு அவர்களின் கேள்விக்கு நல்ல பதிலடி கொடுக்கின்றார். நல்ல காரியம் செய்தார், பேச முடியாதவர் பேசுகின்றாரே என்று நினைக்காமல், அதில்கூட குற்றம் காண்கின்றார்கள். இன்றும் சமுதாயத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெற்ற வண்ணம்தான் உள்ளன. தவறுகளை சுட்டிக் காட்டுவோர் தண்டிக்கப் படுகின்றார்கள். உண்மைகளை சொல்லும் குரல்வளை நசுக்கப் படுகின்றது. அதிகாரத்தில் உள்ளவர்கள், தமது பண பலத்தைப் பிரயோகிக்கின்றார்கள். இதனால் ஏழைகளின் குரல் மழுங்கடிக்கப் படுகின்றது. பலவகையான துஸ்பிரயோகங்கள் இடம் பெறுகின்றன. மனிதரில் மட்டும் அல்லாமல் விலங்குகளில் கூட இடம்பெறுகின்றது என்பதனை அறியும்போது, இந்த மனித சமுதாயம் எதனை நோக்கி பயணிக்கின்றது என்ற சிந்தனை எழத்தான் செய்கின்றது. எத்தனையோ விதமான வளர்ச்சிகளுக்கு மத்தியில் இவ்வாறான அசிங்கங்களும் நிகழத்தான் செய்கின்றன? இதற்கு காரணம் யார்? கடவுளா? நம்மை படைத்தது அவரின் குற்றமா? அல்லது சரிவர வளர்க்காத பெற்றோரின் குற்றமா? தண்டிக்க தவறிய சமுதாயத்தின் குற்றமா? மனமாற்றத்தின் காலத்தில் இவ்வாறான மன நிலை கொண்ட மக்கள் மாற இறைவனிடம் வேண்டுவோம்.